# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 50/மா/2025

நாள்: 05.03.2026

M. விஜயன் மற்றும் G. நீதி,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்கள்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–5,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்கள்

(2) உரிமையாளர்,
ஆம்பூர் தலப்பாகட்டு பிரியாணி கடை,
சென்னை–600 002.

சென்னை–600 081, தண்டையார் பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.விஜயன் மற்றும் திரு. G. நீதி ஆகியோரின் 16.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.12.2024 அன்று பெறப்பட்டு 50/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர்களின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 081, தண்டையார் பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.விஜயன் மற்றும் திரு. G. நீதி ஆகியோர் தங்களது 16.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்கள்:-

"1. நாங்கள் சென்னை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றி வருகின்றோம். சென்னை–600 002, இராயபுரம் மண்டலம்–05, வார்டு 63–க்கு உட்பட்ட சிந்தாதிர்ப்பேட்டை பகுதியில், அண்ணா சாலைக்கு அருகில் நரசிங்கபுரம் தெரு உள்ளது. இந்த தெரு மற்றும் அருகில் இருக்கும் ரிச்சி ஸ்ட்ரீட் உட்பட தெருக்களில் கம்ப்யூட்டர், செல்போன் விற்பனை மற்றும் பழுதுபார்க்கும் கடைகள் மிக அதிக அளவில் உள்ளதால் தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்வார்கள். எங்கள் தேவைக்காகவும் நாங்கள் பலமுறை இங்கு வந்து செல்வோம். மேற்கண்ட நரசிங்கபுரம் தெரு மிகவும் பரபரப்பான தெரு என்பதாலும் பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகவும் இந்த தெருவை சென்னை போக்குவரத்து காவல்துறையின் ஒருவழி பாதை போக்குவரத்து சாலையாக மாற்றம் செய்துள்ளனர்.

2. இந்நிலையில் மேற்கண்ட நரசிங்கபுரம் தெருவின் தொடக்கத்தில் சுமார் பத்து அடி அகலத்திலும் ஐம்பது அடி நீளத்திலும் சாலையை நிரந்தரமாக ஆக்கிரமிப்பு செய்து ஆம்பூர் தலப்பாக்கட்டி என்ற பிரியாணி கடை மற்றும் இன்னொரு பிரியாணி கடை ஆகிய இரண்டு கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட இரண்டு ஆக்கிரமிப்பு கடைகளால் நரசிங்கபுரம் தெருவினை பொதுமக்களால் முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. மேலும் இந்த ஆக்கிரமிப்பு கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களை கடைகளுக்கு அருகிலேயே நிறுத்தி விடுவதால் இந்த சாலை மிகவும் குறுகி விடுகிறது.

3. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பான புகாரினை சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்–05 அதிகாரிகளுக்கு கடந்த 19.04.2024, 20.05.2024 மற்றும் 16.09.2024 ஆகிய தேதிகளில் GCC இணையதளம் வழியாக புகார் அனுப்பியிருந்தோம். அதற்கான பதிலாக ''ஆக்கிரமிப்புகள் விரைவில் அகற்றப்படும். காவல் துறை பாதுகாப்பு கிடைத்தவுடன் அகற்றப்படும்'' என்ற பதில்கள் மட்டுமே கொடுத்தார்கள். எனினும் தற்போதுவரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. இது தொடர்பாக நாங்கள் விசாரித்த போது உள்ளூர் அரசியல்வாதிகள் ஆக்கிரமிப்பு கடைகளில் ஒவ்வொரு மாதமும் பணம் வசூலித்து அதில் ஒரு தொகையை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளுக்கு கொடுத்து விடுவதாகவும், அதனால்தான் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் மாநகராட்சி அதிகாரிகள் மறைமுகமாக ஆதரவு அளித்து வருவதும் தெரிய வந்துள்ளது.

4. எனவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகாரினை விரைவில் விசாரணை செய்து சென்னை–600 002, இராயபுரம் மண்டலம்–05, வார்டு–63க்கு உட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை பகுதியில் அண்ணா சாலைக்கு அருகில் உள்ள நரசிங்கபுரம் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள தெருக்களில் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றி மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்கவும் சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்க சம்பந்தப்பட்ட சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்றத்தை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, மண்டல அலுவலரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய 29.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 63க்குட்பட்ட அண்ணாசாலை, நரசிங்கபுரம் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர வியாபார குழுவின் மூலம் வரையறுக்கப்பட்ட விற்பனை செய்யும் பகுதியாக அறிவிக்கப்பட உள்ளது. மேலும் இப்பகுதியில் உள்ள 25க்கும் மேற்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு இப்பகுதியில்

விற்பனை செய்வதற்கான அடையாள அட்டையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பிரியாணி கடைகளும் இதன் அடிப்படையிலேயே இயங்கி வருகிறது. இக்கடைகளில் உணவு பாதுகாப்பிற்கான சான்றிதழும் முறையாக புதுப்பித்து வருகின்றனர்.

மனுதாரர் இணையதள புகார் பெறப்பட்டதும், காவல்துறையின் அனுமதியுடன் இக்கடைகளை அகற்ற திட்டமிடப்பட்டது. இதன் அடிப்படையில் காவல்துறையின் அனுமதியுடன் இக்கடைகளை அகற்றுவதற்காக மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டது. காவல் துறையின் உதவியுடன் இப்பகுதியில் சென்று அகற்ற முற்பட்டபோது இக்கடைகள் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் இயங்கி வருவதாகவும், அனைவருமே பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் இப்பகுதியில் விற்பனை செய்வதற்கான அடையாள அட்டை பெற்று விற்பனை செய்வது தெரிய வந்தது. மேலும் உணவு பாதுகாப்பிற்கான சான்றிதழும் முறையாக புதுப்பித்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர் என்ற விளக்கத்தினை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர்கள் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. இந்நிலையில், மனுதாரர்களில் ஒருவரான திரு. M. விஜயன் என்பவர் தன்னுடைய 30.01.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"I had earlier submitted a complaint stating that the road side Biriyani shops located on the roadside had encroched upon the pedestrian footpath and requested action against the same. However, I have now come to understand that the said roadside food shop has not made any encroachment and is functioning with proper authorization. Due to my ill health today and the related medical reasons, I am unable to appear in person for the enquiry. Therefore, I humbly request you to kindly accept this statement of mine and permit me to withdraw my complaint." எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5-ன் மண்டல அலுவலர் சார்பாக இளநிலைப் பொறியாளர் 30.01.2026 அன்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் Contempt Petition No.3709/2025-க்கு ஆஜராக வேண்டியிருந்ததால், 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்பதற்கு ஆதாரமாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அலுவலகத்தில் வழங்கிய அனுமதி சீட்டின் நகலினை அனுப்பியுள்ளார்.

7. இரண்டாம் எதிர்மனுதாரான சென்னை-600 002, ஆம்பூர் தலப்பாகட்டு பிரியாணி கடை உரிமையாளரும் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. இந்நிலையில், முறையீட்டு மனுதாரரின் மனு, மின்னஞ்சல் கடிதம் மற்றும் எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5-ன் உதவிப்பொறியாளரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

சென்னை 2, இராயபுரம், மண்டலம் 5, வார்டு 63க்கு உட்பட்ட சிந்தாதிரிப்பேட்டை, பகுதியில் அண்ணாசாலைக்கு அருகில் உள்ள நரசிங்கபுரம் தெருவின் தொடக்கத்தில் சுமார் பத்து அடி அகலத்திலும் ஐம்பது அடி நீளத்திலும் சாலையை நிரந்தரமாக ஆக்கிரமிப்பு செய்து ஆம்பூர் தலப்பாக்கட்டி என்ற பிரியாணி கடை மற்றும் இன்னொரு பிரியாணி கடை ஆகிய இரண்டு கடைகள் செயல்படுகிறது என்பதும், இந்த ஆக்கிரமிப்பு கடைகளால் நரசிங்கபுரம் தெருவினை பொதுமக்களால் முழுமையாக பயன்படுத்த முடியவில்லை என்பதும், இந்த ஆக்கிரமிப்பு கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களை கடைகளுக்கு அருகிலேயே நிறுத்தி விடுவதால் இந்த சாலை மிகவும் குறுகி விடுகிறது என்பதும், இது குறித்து சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 5–க்கு அனுப்பிய புகார்களுக்கு இந்த ஆக்கிரமிப்புகள் விரைவில் அகற்றப்படும் என பெருநகர மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டும், ஆனால் அவ்வாக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை என்பதும், மேற்கண்ட நரசிங்கபுரம் தெருவினைச் சுற்றியுள்ள தெருக்களில் உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றி மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்க சட்டப்படி தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்குமாறு கோரியிருப்பதும், 30.01.2026 நாளிட்ட மனுதாரரின் மின்னஞ்சலில், தற்போது அந்த சாலையோர உணவகம் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், முறையான அனுமதியுடன் செயல்பட்டு வருகிறது என்றும் தான் அறிந்துகொண்டதாகவும், தனது உடல்நலக்குறைவு மற்றும் அது தொடர்பான மருத்துவக் காரணங்களால், தன்னால் விசாரணைக்கு நேரில் ஆஜராக முடியவில்லை என்பதும், எனவே, தனது இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு, தனது புகாரைத் திரும்பப் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளதும் மனுதாரரின் மனு மற்றும் மின்னஞ்சல் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு எண் 63க்குட்பட்ட அண்ணாசாலை, நரசிங்கபுரம் தெருவானது பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர வியாபார குழுவின் மூலம் வரையறுக்கப்பட்ட விற்பனை செய்யும் பகுதியாக அறிவிக்கப்பட உள்ள நிலையில், மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் 25க்கும் மேற்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கு அதேபகுதியில் விற்பனை செய்வதற்கான அடையாள அட்டை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பிரியாணி கடைகளும் இதன் அடிப்படையிலேயே இயங்கி வருகிறது என்பதும், இக்கடைகளுக்கான உணவு பாதுகாப்பிற்கான சான்றிதழும் முறையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், காவல்துறையின் அனுமதியுடன் இக்கடைகளை அகற்ற திட்டமிடப்பட்டு, காவல்துறையின் அனுமதியுடன் இக்கடைகளை அகற்றுவதற்காக மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டது என்பதும், காவல் துறையின் உதவியுடன் இப்பகுதியில் சென்று அகற்ற முற்பட்டபோது இக்கடைகள் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக இப்பகுதியில் இயங்கி வருவதாகவும், அனைவருமே பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் இப்பகுதியில் விற்பனை செய்வதற்கான அடையாள அட்டை பெற்று விற்பனை செய்வது தெரிய வந்தது என்பதும், உணவு பாதுகாப்பிற்கான சான்றிதழும் முறையாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் இளநிலைப் பொறியாளரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது புகாரில் தெரிவித்த சாலையோர உணவகம் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், தனது விளக்கத்தினை ஏற்றுக் கொண்டு தனது புகாரைத் திரும்பப் பெற அனுமதிக்குமாறு மனுதாரர் தன்னுடைய 30.01.2026 நாளிட்ட மின்னஞ்சலில் தெரிவித்துள்ள நிலையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப் பொறியாளர் தனது 29.01.2026 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் குறிப்பிட்ட பிரியாணி கடைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட விற்பனை செய்வதற்கான அட்டை பெற்று அதன் அடிப்படையில் இயங்கி வருவதாக தெரிவித்துள்ளதாலும் மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M.விஜயன் மற்றும் திரு. G. நீதி,
கதவு எண்.3/13, 4வது தெரு, கருணாநிதி நகர்,
தண்டையார் பேட்டை,
சென்னை–600 081.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 5, கோட்டம் 63,
பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசின் பிரிட்ஜ் சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021.

(4) உரிமையாளர், ஆம்பூர் தலப்பாகட்டு பிரியாணி கடை,
எண் 19, நரசிங்கபுரம் தெரு,
சிந்தாதரிப்பேட்டை,
சென்னை–600 002.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/3/26
செயலாளர்.
9.3.26